# நடப்பு நிகழ்வுகள்- ஏப்ரல் 06 - 2018

- **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிறந்த தினம்** - ஏப்ரல் 6. இவர் 1815-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதி பிறந்தார். இவர் சிறந்த தமிழறிஞர் உ.வே.சாமிநாத ஐயரின் ஆசிரியர்.

- **அமைதி மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச விளையாட்டு தினம் - ஏப்ரல் 6.** (International Day of Sport for Development and Peace). 2018 ஆம் ஆண்டிற்கான அமைதி மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேச விளையாட்டு தின கருபொருள் Play for Goals என்பதாகும்.

- இந்திய மருத்துவ கவுன்சிலின் முதுநிலை மருத்துவக்கல்வி ஒழுங்குமுறைகள் 2000-ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த புதிய திருத்தத்தின் படி அனைத்து தனியார் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளும் 2020-21-ம் தேதி கல்வியாண்டு முதல் முதுநிலை மருத்துவப்படிப்பை தொடங்கவேண்டியது கட்டாயமாகிறது.

- 2018 ஏப்ரல் மாதம் 10ம் தேதி புது டில்லியில் 16-வது சர்வதேச எரிசக்தி மன்றம் (International Energy Forum) அமைச்சர்கள் கூட்டத்தை இந்தியா நடத்துகிறது. இதனை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைக்கிறார்.

- சீனா 2011 ஆம் ஆண்டு ஏவிய “டிரான்காங் -1” என்ற விண்வெளி நிலையம் செயலற்றுப் போய்விட்டதாக சீனா கடந்த 2016-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதி அறிவித்தது. அதன் பின்னர் விண்வெளியில் கட்டுப்பாடற்று சுற்றி வந்துகொண்டிருந்த இந்த விண்வெளி நிலையம் 02-04-2018 அன்று தென் பசுபிக் கடலில் விழுந்தது.

- புகழ்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர் மற்றும் எழுத்தாளரான ஸ்டீவன் போக்கோ (74) ஏப்ரல் 1 அன்று கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த லாஸ் ஏஞ்சல்சில் காலமானார். புலநாய்வு நாடகங்களில் முன்னோடியான ‘Hill Street Blues’ ஐ உருவாக்கியதின் மூலம் இவர் பிரபலமானார்.

OXFORD IAS ACADEMY

- 2018-19 பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. பாரத ரிசர்வ் வங்கியின் பணக்கொள்கை ஆய்வறிக்கை முன்பு 45 நாட்களுக்க ஒரு முறை வெளியிடப்பட்டது. தற்போது 2 மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகிறது.

- **அதிக ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில்** (192 போட்கள்) **விளையாடிய விராங்கனை** என்ற சாதனை படைத்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் **மிதாலி ராஜ்.**

- இந்தியாவில் அடுத்த 5 ஆண்டுகளுக்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான உரிமத்தை "ஸ்டார் நிறுவனம்" பெற்றுள்ளது. ரூ6,138.1 கோடிக்கு ஒளிபரப்ப உரிமத்தை பெற்றுள்ளது. 2018 ஏப்ரல் 15 முதல் 2023 மார்ச் 31-ம் தேதி வரை ஒளிபரப்ப உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

- செவ்வாய் கிரகத்தில் இறங்குவதற்காக "ஆஸ்பைர்" எனப்பெயரிடப்பட்டுள்ள சூப்பர்சோனிக் பாராசூட்டை அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையம் வெற்றிகரமுடன் விண்ணில் அனுப்பி சோதனை செய்துள்ளது.

- வழிமண்டல ஆராய்ச்சிக்காக RH300 sounding rocket என்ற ராக்கெட்டை இந்தியா விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. இதை திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் உருவாக்கியுள்ளது. Vikram Sarabhai Space Centre (VSSC)-ன் இயக்குநர் - எஸ்.சோம்நாத்.

- ஐ.ஐ.டி கான்பூர், கழிவுநீரை மறுசுழற்சி செய்வதோடு மட்டுமல்லாது மின்சாரமும் தயாரிக்கவல்ல பயோ-டாய்லெட்டை உருவாக்கியுள்ளது. இந்த பயோ எலக்ட்ரிக் டாய்டிலட்டிற்கு மத்திய அரசின் "தூய்மை இந்தியா விருது" வழங்கப்பட்டுள்ளது.

- காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் போட்டியில் மகளிர் அணிகள் பிரிவில் இந்தியா 3-1 என்ற கணக்கில் சிங்கப்பூரை விழ்த்தி தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

OXFORD IAS ACADEMY